8th August 1955]

the Madras system) still remains far from satisfactory in spite of commissioning an additional 15 MW set in January 1955 in the Basin Bridge Power Station. During the dry months, Madras has got to meet the demand for relief from the Hydro areas due to shortage of water in the reservoirs. Therefore it will not be possible to remove all the restrictions in force till such time as there is an improvement in the power position by the completion and bringing into operation of the Periyar Hydro-Electric Project."

Revenue from temples in the State

* 1995 *Q.*—Sri R. S. ARUMUGAM: Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the total income derived by the Government from the temples in the State in 1954?

The Hon. Sri B. PARAMESWARAN :—" The Government do not derive any income from temples. They are collecting contributions and audit fees respectively towards the expenses incurred on the services rendered by them to religious institutions and the cost of auditing the accounts of those institutions. The collections so made during 1st January 1954 to 31st December 1954 were :—

	RS.	A.	P.
Contributions	3,67,515	4	1
Audit fees	3,63,660	12	3"

Village panchayats in Coimbatore district

* 1996 *Q.*—Sri K. G. PALANISAMI GOUNDAR (on behalf of Sri A. Senapathi Gounder): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the total number of village panchayats constituted in the Coimbatore district during the years 1952, 1953 and 1954;

(*b*) whether it is a fact that the District Panchayat Officer, Coimbatore, has not taken any steps to constitute a village panchayat for Koluthupalayam village, Dharapuram taluk, even though the villagers are pressing for it; and

(*c*) if so, the reasons therefor?

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—" (*a*) The number of panchayats constituted in the Coimbatore district during the years 1952, 1953 and 1954 is 2, 4 and 95 respectively.

" (*b*) No, the notification constituting a panchayat for the village was issued in February 1955.

" (*c*) Does not arise."

Sri K. R. NALLASIVAM :—" ஜில்லா போர்டு பஞ்சாயத்து ஆபீஸர்களுக்கு சில இடங்களிலிருந்து பஞ்சாயத்து போர்டுகள் அமைக்கவேண்டுமென்று விண்ணப்பித்திருந்தோம். கீழ் பவானிப் பாசனப் பிரதேசம்

சமுதாய நலத்திட்டப் பிரதேசமாக இருக்கிறது. பஞ்சாயத்து போர்டுகளை அமைத்துவிட்டால் ஏராளமான பணத்தை சென்னசமுத்திரம், எழுநூத்திமங்கலம் போன்ற அப்பிரதேசங்களில் செலவிட்டு நல்ல காரியங்களைச் செய்ய முடியும். அந்த கிராமங்களிலிருந்து பஞ்சாயத்து போர்டுகளை அமைக்க வேண்டுமென்று விண்ணப்பம் வந்து வருஷம் இரண்டாகியும்கூட எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்த ஆபீசரின் நடவடிக்கையை வேகப்படுத்துவதற்கு, அல்லது வேகமுள்ள புதிய அதிகாரியைப் போடுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ? ”

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—“ பஞ்சாயத்து போர்டுகளை அதிகமாக அமைக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் கோயம்பத்தூர் ஜில்லாவில் பஞ்சாயத்து போர்டுகளை அமைப்பதில் பல தகராறுகள் வந்து கொண்டிருக்கின்றன. அதனால்தான் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.”

Sri N. K. PALANISAMY :—“ கோயம்பத்தூருக்குப் பக்கத்திலுள்ள மதுக்கரையிலிருந்து வருஷ வருமானம் 30 ஆயிரத்துக்கு மேல் வருகிறது. அது பூராவையும் ஜில்லா போர்டார் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். மதுக்கரைக்குப் பஞ்சாயத்து போர்டு அமைக்கவேண்டுமென்று ஐந்து வருஷ காலமாகவே அவ்வூர் மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கோயம்பத்தூர் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. மதுக்கரைக்குப் பஞ்சாயத்து போர்டு அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கும்படி அந்த ஆபீசருக்கு சர்க்கார் உத்திரவு போடுவார்களா ? ”

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—“ அதில் கவனம் செலுத்துகிறோம்.”

Sri S. R. ARUMUGAM :—“ நம்முடைய மாகாணத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களும் நன்மை அடைய வேண்டுமென்பதற்காகவும், அபிவிருத்தி அடையவேண்டுமென்பதற்காகவும்தான் நாம் எங்கு பார்த்தாலும் பஞ்சாயத்து போர்டுகளை அமைக்கவேண்டுமென்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இருந்தாலும் பஞ்சாயத்துக்களை அமைப்பதில் ஏன் தாமதம் ? ஜனங்களாகவே முன்வந்து அமைக்கவேண்டுமென்று கேட்டாலும் அவற்றை அமைத்துக்கொடுப்பதற்கு ஏன் இவ்வளவு தாமதம் ? ”

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—“ பஞ்சாயத்து அமைப்பது என்றால் சில முறைகள் இருக்கின்றன. விண்ணப்பம் போட்டவுடன் அமைத்துவிட முடியாது. பஞ்சாயத்து போர்டுகளை அமைப்பதாயின் அதற்காகப் போடப்பட்டிருக்கும் சில விதி முறைகளைப் பின்பற்றித்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். அதனால் சிறிது காலதாமதம் ஆனால் அது தவிர்க்க முடியாதது.”

Sri M. NARAYANA KURUP :—“ Sir, the Hon. Minister mentioned about some trouble. We have often been told that Coimbatore is an ideal district where everything is running smoothly. May I know what the difficulties are in the formation of panchayats in that district? ”

The Hon. Sri S. S. RAMASAMY PADAYACHI :—“ It may be, Sir, that some villages may not like to join with one panchayat and may like to join with some other panchayat or that some villages want separation from a panchayat. These are the troubles in that district.”

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS